2024-ம் ஆண்டு, மே மாதம், 30-ம் தேதி தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமம், தெற்கு தெரு என்ற முகவரியில் இருக்கும் லேட்.ரெங்கசாமி வேளாளர் மகன் வழக்கறிஞர்.ரெ.ராமசாமி அவர்களிடம் தகவல் பெற்ற பட்டுக்கோட்டை அட்வகேட் **R. ரமேஷ் BA.,B.L.,**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை கிராமம், தெற்கு தெரு, கதவு எண்.116 என்ற முகவரியில் வசித்து வந்து தற்காலம் சிங்கப்பூர் நாட்டில் வசிக்கும் பழனிவேல் வேளாளர் மகன் பிரபாகர் அவர்களிடம் தகவல் பெற்ற வழக்கறிஞர் **துரை.தியாகராஜன் B.Com., B.L.,** அவர்களுக்கு கொடுத்த பதில் அறிவிப்பு.

1. தங்களது 04-05-2024-ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பில் கண்ட விஷயங்கள் சரியல்ல. தங்களது வழக்கறிஞர் அறிவிப்பில் கண்ட விஷயங்களை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். தங்களது வழக்கறிஞர் அறிவிப்பில் எமது கட்சிக்காரருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து அறிவிப்பு அனுப்பவில்லை. எமது கட்சிக்காரருக்கு 75 வயதாகிறது. தங்களது அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள அருள்மிகு.சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. தங்களது அறிவிப்பில் சொல்லியுள்ளது போல் குறிப்பிட்ட நான்கு சமூகத்தினருக்கு மட்டும் சொந்தமான கோவில் கிடையாது. அருள்மிகு.சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வெண்டாக்கோட்டை கிராமத்தில் வசிக்கும் அனைத்து சமூகத்தினருக்கும் உரிய பொதுக்கோவில் ஆகும்.

2. தங்களின் கட்சிக்காரர் பிரபாகரனும் எமது கட்சிக்காரர் ரெ.ராமசாமியும் பங்காளிகள் ஆவார்கள். தங்கள் அறிவிப்பில் சொல்லியுள்ள செட்டில்மெண்ட் ஆவண எண். 5208/1911-ல் கண்ட கோவிந்தசாமி வேளாளரின் வகையை சேர்ந்த தற்போது வெண்டாக்கோட்டை கிராமத்தில் வசித்து வரும் 80 குடும்பங்களில் தங்களது கட்சிக்காரர் பிரபாகரனின் குடும்பமும் எமது கட்சிக்காரர் ரெ.ராமசாமியின் குடும்பமும் அடங்கும். ஷை இருவரும் ஷை செட்டில்மெண்டில் கண்ட 23 குடும்பங்களில் சேர்ந்தவர்கள் என்பதும் தங்கள் அறிவிப்பில் கண்ட அருள்மிகு.சுப்பிரமணிய சுவாமி கோவில் உள்ளிட்ட அனைத்திலும் சம உரிமை உள்ளவர்கள் என்பதும் தங்கள் கட்சிக்காரருக்கும் நன்றாகவே தெரியும்.

3. தங்களது அறிவிப்பில் இரண்டாவது பத்தியில் கண்டுள்ள ஆவண எண். 5208/1911-ன் படி வெண்டாக்கோட்டை கிராம கோவில்கள் பராமரிப்பு மற்றும் நிர்வாகம் செய்ய 10 ஆண்டுகளுக்கு மட்டுமே 5 பேரை தேர்வு செய்துள்ளனர் என்பது ஷை ஆவணத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின் 23 குடும்பங்களை சேர்ந்தவர்களோ அல்லது வாரிசுகளோ மேலே கண்ட 5 பேர்களையாவது அல்லது

அவர்களின் வாரிசுகளாவது இருந்து நடத்தும் விஷயத்தை அவரவர்களும் அவரவர்கள் பிறியப்படி நடந்துகொள்கிறது என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விஷயமும் தங்களது கட்சிக்காரருக்கு தெரியும்.

4. ஷை ஆவணப்படி 23 வகையறாக்களில் எமது கட்சிக்காரர் தங்கள் அறிவிப்பில் கண்டபடி 8-வது நபர் அல்ல. எமது கட்சிக்காரர் 23 வகையறாக்களில் 17-வது நபர் கந்தசாமி வேளாளர் மகன் அருணாச்சல வேளாளரின் வாரிசு என்பதை அறியவும். ஷை ஆவணப்படி எமது கட்சிக்காரர் பரம்பரை அறங்காவலராக போட்டியிடுவதற்கும், நியமனம் செய்வதற்கும் முழு தகுதி உள்ளவர் என்பதை இதன்மூலம் எமது கட்சிக்காரர் தெரிவித்துக்கொள்கிறார்.

5. தங்களது அறிவிப்பில் 5-வது பத்தியில் சொல்லியுள்ள விஷயங்கள் அப்பட்டமான பொய்யாகும். ஷை கோவில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு அதுமுதல் இன்றுவரை தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

6. தங்களது அறிவிப்பில் 6-வது பத்தியில் கண்டுள்ள விஷயங்கள் தவறானது. எமது கட்சிக்காரர் தெரிந்தவரை கடந்த 50 ஆண்டுகளில் தற்போது 5-வது முறையாக பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் அறநிலையத்துறையால் நியமிக்கப்பட்டுள்ளது. தங்களது அறிவிப்பில் சொல்லியுள்ள வழக்கு பற்றி எமது கட்சிக்காரருக்கு தெரியாது.

7. தங்களது அறிவிப்பில் 8-வது பத்தியில் கண்டுள்ள விஷயங்கள் சரியல்ல. அவைகளை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். O.A. 5/2007-ன் வழக்கிற்கும் தங்கள் நோட்டீஸில் கண்டுள்ள 2-வது நபர் கோ.புருஷோத்தமன் அவர்களுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது.

8. தங்களது அறிவிப்பில் 9-வது பத்தியில் கண்டுள்ள விஷயங்கள் சரியல்ல. A.P.14/2012/ D2 என்ற வழக்கில் O.A. 5/2007 வழக்கு ரத்து செய்யப்பட்டதாக சொல்லியிருப்பது தவறு. ஷை வழக்கு மீண்டும் விசாரணைக்கு தஞ்சாவூர் இணை ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்பிறகு ஷை வழக்கு விசாரணைக்கு எமது கட்சிக்காரர் ஆஜராகாமல் வழக்கில் இருந்து விலகிவிட்டார்.

9. தங்களது அறிவிப்பில் 10-வது பத்தியில் சொல்லியுள்ள விஷயங்களை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். எமது கட்சிக்காரரை தேவையில்லாமல் தொடர்புபடுத்துவதாக தெரிவிக்கிறார்.

10. தங்களது அறிவிப்பில் 11-வது பத்தியில் சொல்லியுள்ள விஷயங்களை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். எமது கட்சிக்காரர் இந்து சமய அறநிலையத்துறை சட்டம் மற்றும் விதிகளுக்கு மாறாக எதையும் செய்யவில்லை. உண்மைக்கு மாறான

RK

தகவல்களை எந்த காலத்திலும் அறநிலையத்துறை அலுவலகத்திலும், நீதிமன்றத்திலும் தெரிவிக்கவில்லை. எமது கட்சிக்காரர் அரசியல் செல்வாக்கை எந்த இடத்திலும் பயன்படுத்தியது கிடையாது. எமது கட்சிக்காரர் எந்தவித ஆதாயமும் அடைந்தது கிடையாது. எமது கட்சிக்காரர் அருள்மிகு.சுப்பிரமணிய சுவாமி கோவிலின் நன்மைக்காக மட்டுமே தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

11. தங்களது அறிவிப்பில் 12-வது பத்தியில் சொல்லியுள்ள விஷயங்களை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். தங்கள் கட்சிக்காரரின் முன்னோர்களையும், குடும்பத்தினரையும் ஏமாற்றும் விதமாக செயல்பட்டதாக சொல்லியிருப்பது பொய்யாகும். அவைகளை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். தங்கள் கட்சிக்காரரை அவமானப்படுத்தியுள்ளதாக சொல்லியிருப்பது பொய்யாகும் அவைகளை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். தங்கள் கட்சிக்காரரின் முன்னோர்களையோ, குடும்பத்தினரையோ தங்கள் கட்சிக்காரரையோ எமது கட்சிக்காரர் எந்த காலத்திலும் ஏமாற்றவில்லை அவமானப்படுத்தவில்லை. அதற்கு அவசியம் இல்லை. தங்களது அறிவிப்பில் வேண்டுமென்றே எமது கட்சிக்காரரை மிரட்ட வேண்டும் என்றும் எமது கட்சிக்காரரை அவமானப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தங்களது கட்சிக்காரர் உள்நோக்கத்துடன் செயல்பட்டுவருகிறார்.

12. தங்களது அறிவிப்பில் 13-வது பத்தியில் சொல்லியுள்ள விஷயங்களை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். தங்களது கட்சிக்காரர் சிங்கப்பூரில் நிரந்தரமாக குடியுரிமை (P.R) பெற்று வசித்து வருகிறார். எப்போதாவது தான் வெண்டாக்கோட்டை கிராமத்திற்கு வருவது வழக்கம் தங்களது கட்சிக்காரர் சமூகத்தின் மத்தியில் பெருத்த அவமானமும், மிகுந்த மன உளைச்சலும் அடைந்துள்ளதாக சொல்லியிருப்பது பொய்யாகும். அவைகளை எமது கட்சிக்காரர் மறுக்கிறார். எமது கட்சிக்காரர் எந்தவித ஆள்மாறாட்டமும் செய்யவில்லை. தங்களது அறிவிப்பில் சொல்லியுள்ள எந்த பரிகாரமும் தங்களது கட்சிக்காரருக்கு கிடைக்கக்கூடியது அல்ல. தங்களது அறிவிப்பில் சொல்லியுள்ளது போல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் படி எந்த செயல்களும் செய்யவில்லை. Crpc பிரிவு 340-ன்படி எந்த விதமான நடவடிக்கையும் எமது கட்சிக்காரர் மீது எடுக்க இயலாது. தங்களது கட்சிக்காரர் எந்தவிதமான நஷ்டஈடு தொகையும் கேட்டு எந்த வழக்கும் தாக்கல் செய்ய இயலாது.

13. தங்களது அறிவிப்பில் சொல்லியுள்ள கோவிந்தசாமியின் மனைவி வீரசுந்தரி பரம்பரை அறங்காவலர் கிடையாது. ஷை கோவிந்தசாமி இந்து சமய அறநிலையத்துறையில் எந்தவித மனுவும் தாக்கல் செய்யவில்லை. ஷை

RR

கோவிந்தசாமிமனைவி வீரசுந்தரி பரம்பரை அறங்காவலராக மனு செய்வதற்கு எந்தவித உரிமையும் கிடையாது. ராஜப்ப வேளாளரின் மகன் நடனசபாபதி பரம்பரை அறங்காவலர் கிடையாது. ஷை ராஜப்ப வேளாளர் ஷை கோவிந்தசாமியின் தகப்பனார் தர்மராஜ வேளாளர் தான் மட்டும் பரம்பரை அறங்காவலர் என்று O.A.79/1972-ல் தஞ்சாவூர் உதவி ஆணையரிடம் மனு செய்தார். ஷை வழக்கில் ஷை ராஜப்ப வேளாளர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு ஷை தர்மராஜ வேளாளர் பரம்பரை அறங்காவலர் இல்லை என்று எதிர்வழக்காடி ஷை கோவில் ஊர் பொதுக்கோவில் என்று உத்தரவு பெற்றவர். தற்போது அவருடைய மகன் நடனசபாபதி பரம்பரை அறங்காவலர் மனு செய்திருப்பது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லதக்கதல்ல. 3-வது நபர் சிவகுரு செட்டியாரின் தந்தை இளங்கோவன் செட்டியார் மேலே கண்ட O.A.5/2007-ல் பரம்பரை அறங்காவலருக்கு மனு செய்துவிட்டு நடுவிலேயே வழக்கில் இருந்து விலகிகொண்டார். எனவே ஷை சிவகுரு செட்டியார் பரம்பரை அறங்காவலருக்கு மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லதக்கதல்ல. அதேபோல் ஷை O.A.5/2007-ல் எமது கட்சிக்காரர் ராமசாமியுடன் சேர்ந்து ராஜேந்திரன் தொண்டமான், திருத்தணிவேல் முதலியாரின் தந்தை ரெங்கசாமி முதலியார் இருவரும் வழக்கிலிருந்து விலகிகொண்டார்கள். எனவே ஷை 5 பேரும் பரம்பரை அறங்காவலருக்கு மனு செய்வதற்கு உரிமையில்லை. ஷை வழக்கிலிருந்து எமது கட்சிக்காரர் விலகி கொண்ட பிறகு ஷை வழக்கில் கண்ட சங்கதிகள் செயல் இழந்து விட்டது. O.A.5/2007 வழக்கு முடிவுக்கு வராமல் தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு வழக்கில் 17 ஆண்டுகளுக்கு முன் அதாவது (1-1/2 - 12 ஆண்டுகள்) முன்பு சொல்லப்பட்ட சங்கதிகள் நீர்த்து போய்விட்டது என்பதை எமது கட்சிக்காரர் தங்களது கட்சிக்காரருக்கு தெரிவத்துக்கொள்கிறார். தங்களது கட்சிக்காரர் 75 வயதான எமது கட்சிக்காரருக்கு சிங்கப்பூர் நாட்டில் இருந்து கொண்டு தங்கள் கட்சிக்காரர் எமது கட்சிக்காரருக்கு தொடர்ந்து அவமானப்படுத்த வேண்டும் என்றும், எமது கட்சிக்காரருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்த வேண்டும் என்றும், தங்கள் கட்சிக்காரர் தொடர்ந்து செயல்பட்டு வருவதால் எமது கட்சிக்காரர் தேவைப்பட்டால் தங்கள் கட்சிக்காரர் மீது அனைத்து சட்டப்பூர்வமான நடவடிக்கையும் எடுப்பதற்கு தயாராக இருக்கிறார் என்பதற்கு இந்த பதில் அறிவிப்பு அனுப்பப்படுகிறது.

14. அருள்மிகு.சுப்பிரமணிய சுவாமி கோவிலை புதுப்பித்து புதிதாக கட்டுவதற்கு தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத்துறை உத்தரவுப்படி 20-12-2005-ம் தேதி பரம்பரை அல்லாத அறங்காவலர் குழு தலைவராக அப்போது இருந்த வை.ராமச்சந்திரன் தலைமையிலும், புரவலராக எமது கட்சிக்காரரையும் உள்ளடக்கிய 30 பேர் கொண்ட திருப்பணி குழு அமைக்கப்பட்டு திருப்பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று அருள்மிகு. சுப்பிரமணிய சுவாமி கோவில் புதிதாக கட்டப்பட்டு கடந்த 16-05-2008-ம்

ஆண்டு சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது இந்த விபரங்களும் தங்கள் கட்சிக்காரருக்கு நன்கு தெரியும். எமது கட்சிக்காரர் வழிகாட்டுதலின்படி தொடர்ந்து கிராமத்தில் உள்ள அனைவரும் ஒன்றாக சேர்ந்து ஷை கோவிலின் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது என்பதற்கும் இந்த பதில் அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பிற்கு பிறகு தங்கள் கட்சிக்காரர் எமது கட்சிக்காரர் மீது தேவையில்லாமல் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் அதனால் எமது கட்சிக்காரருக்கு ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களுக்கு தங்கள் கட்சிக்காரரே பொறுப்பாவார் என்பதற்கும் இந்த பதில் அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

R.R—

அட்வகேட்,

30-5-2024

R.RAMESH, B.A., B.L.,
Advocate
119, Chinnaiya Street
PATTUKKOTTAI-614 602
Cell: 94422 57122